Assistance for erecting Cement Plant at Indonesia

* 398 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Indonesian Government has placed orders with the State Government for setting up a Cement Plant in that Country; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இந்தோனேசியா அரசின கட்டளைப்படி, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின கீழுள்ள டால்மியாபுரம் சிமெண்ட் தயாரிப்பு முன்னோடித் தொழிற்சாலையை ஆய்வு செய்வதற்கென இந்தோனேசிய பொதுப்பணி அமைச்சகத்தின் இயக்குநர் இந்தியாவிற்கு வந்தார். அவர் தமது நாட்டில் அத்தகைய தொழிற் பிரிவுகளை நிறுவுவதற்கான தொழில் நுட்ப பொருளாதாரத் தேவை குறித்து முழுமன நிறைவு அடைந்தார்.

அதன்பிறகு, கொழும்புத் திட்டத்தின் கீழ் இந்தோனேசியாவில் சிறிய சிமெண்டு தயாரிப்புத் தொழிற்சாலை (Micro Cement Plant) ஒன்றை நிறுவுவதற்காக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திலிருந்து இரண்டு வல்லுநர்களை அனுப்புமாறு இந்தோனேசிய அரசு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டது. இருப்பினும், தற்போது, இத்துறையில் உள்ள வல்லுநர் ஒருவரை மட்டும் அனுப்புவது என்று இந்திய அரசு கருதி, இந்தோனேசிய அரசுக்கு முகமையில் அனுப்புவதற்கு ஒரு வல்லுநரின் பெயரைப் பரிந்துரைக் குமாறு இந்த அரசை எழுதிக் கேட்டுள்ளது. இந்தோனேசியாவிற்கு முகமை யில் அனுப்புவதற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த தலைமைப் பொறியாளராகிய (திட்ட அமைப்பு) - (Chief Engineer, Project Planning) மேஜர் என். இராமச்சந்திரன் அவர்களை இந்த அரசு பரிந்துரைசெய்துள்ளது.

THIRU K. VINAYAKAM: What is the object of deputing this expert from the Industrial Development Corporation of our State? Is it just to give advice or to encourage installing of an industry in the public sector in Indonesia or in any private sector in Indonesia with the help of Dalmia Company from our country?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறு அளவிலே மூலப்பொருள் கிடைக் கிற இடங்களில் சிறிய தொழிற்சாலையை அமைக்க முடியும் என்று ஒரு பைலட் ஸ்கீம் நம்முடைய தமிழ் நாட்டின் சார்பிலே வெற்றியாக நடத்தி முடித்திருக் கிறார்கள். அதைச் செய்து முடித்தவர் இந்தப் பொறியியல் வல்லுநர் என்சி னியர் திரு. ராமசந்திரன் அவர்கள். வெளிநாடுகளில் இப்படிப்பட்ட இயந்திர சாதனங்கள் வேண்டும் என்று அவர்கள் கேட்டிருந்தார்கள். இண்தோனே ஷியா நாட்டில் இது போன்ற சிறிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அங்கே அவர்கள் சென்று அந்தத் தொழிற்சாலையை

அமைப்பதற்கு யோசனை கூற இருக்கிறார்கள். அவர்கள் யோசனை கூறியதற்குப் பின்னால் நாம் இங்கே தோற்றுவித்தால் புதிய இயந்திரசாதனம் அவர்களுக்குத் தரப்படும். அதனுடைய விலையை நமக்குத் தருவார்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த பைலட் கில்ம், டால்மியா புரத்திற்குப் பக்கத்தில் அமைந்துள்ள தொழிற்சாலையில் உற்பத்திசெய்த சிமெண்டு தரமாக இல்லை. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண் 399.

Coir industry

* 399 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government propose to set up six coir industrial centres or factories in our State; and

(b) if so, in what places; and at what cost?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம். இதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இந்த இடங்கள் தஞ்சாவூர், திருச்சி, தென்-ஆற்காடு, சேலம், கோயம்புத்தூர், கன்னியாகுமரி மாவட்டங்களில் தென்னந்தோப்புகள் அதிகமாக உள்ள இடங்களில் நிறுவலாம் என்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் திட்டவட்டமான இடங்கள் இன்னும் குறிக்கப்படவில்லை. ஒவ்வொரு நிறுவனமும் நிலம், கட்டிடங்கள் இயந்திரங்களுக்காக ரூ. 60,000 மதிப்பீடு உள்ளவை.

திரு. கே. விநயகம் : இந்தக் கயிறு திரிக்கின்ற வேலை—நம்முடைய மாவட்டத்திலும்—உற்பத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகளைச் செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் கனம் அங்கத்தினர் தொகுதியில் கயிறு திரிக்கும் வேலை வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுகிறார்கள். அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கான திட்டம் தயாரித்து கயிறு திரிப்பதற்கான வேலையைப் பற்றி அவர்கள் ஆலோசனை கூறலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவில் ஈத்தாமொழியில் இப்பொழுது ஒரு டிராயினிங் சென்டர் இருந்துகொண்டிருக்கிறது. அங்கே கயிறுப் பொருள்கள் தாராளமாகக் கிடைக்கிறது. ஆகவே, அந்த நிறுவனத்தை அங்கு தொடங்குவதற்கு வேண்டிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்துவது பற்றியும் நம்முடைய பரிசீலனையில் இருக்கிறது. நாம் மொத்தம் 20 மாஸ்யுபாக்சரிங் யூனிட்களும் ஒரு மத்திய சங்கமும் அமைக்கவேண்டும் என்று